# செயற் சாதனை அறிக்கை

# 2013

## இலங்கை புகையிரதத் திணைக்களம்

# உள்ளடக்கம்


பக்கம்

முன் நோக்கு.

சேவைகள்

01. குறிக்கோள் ........ 1

02. நிறைவேற்றுச் சாராம்சம் ........ 1

03. பின் விபரம் ........ 3

3.1 வடக்குப் புகையிரதப் பாதையின் அபிவிருத்தித் திட்டங்களின் வளர்ச்சி ........ 4

3.2 சகல விதத்திலுமான விபரிப்புக்கள் ........ 6

04. நிதியும் பௌதீக வளர்ச்சியும் ........ 8

05. ஓட்டச் சக்தியை வழங்களும் புகையிரத அணியும் ........ 15

5.1 புகையிரத அணி ........ 15

5.2 எரிபொருள் பாவனைகள் ........ 15

5.3 இன்ஜின் கோளாருகள் ........ 16

06. நிரந்தரப் பாதைக் கட்டமைப்பும் கட்டிடங்களும் ........ 16

07. சைகையும் மின் தொடர்பாடல் அமைப்பும் ........ 18

08. இயக்கப் பாட்டுச் செயற் திறமைகள் ........ 19

09. நிதியியல் செயற் திறமைகள் ........ 23

10. பயணிகளின் வசதிகளும் ஏனைய அபிவிருத்திச் செயற் பாடுகளும் ........ 25

11. இலங்கை ஜெர்மனி தொழில்நுட்பப் பயிற்சி நிலையம் ........ 26

12. புகையிரதப் பாதுகாப்புப் படை ........ 26

13. செயற் திறனையும் பிரதி பலன்களையும் அபிவிருத்தி செய்வதற்காக மேற் கொள்ளப் பட்ட செயற் பாடுகள். ........ 27

16. சவால்களும் பிரச்சினைகளும் ........ 29

17. 2013ம் வருடத்திலே செயற் படுத்திக் கொண்டிருக்கின்ற திட்டங்கள் ........ 29

18. எதிர் காலத்திலே செயற் படுத்தப் படவுள்ள திட்டங்கள் ........ 30

## முன் நோக்கு.

பயணிகளினதும் பொருட்களினதும் போக்குவரத்துக்காகப் பல்வேறு வகையான போக்குவரத்துச் சாதனங்களிற்கு மத்தியில் நிதிச் சுயாதீனத்துடன் கூடியதுமான பயன்மிக்க புகையிரதப் போக்குவரத்துச் சேவையொன்றை வழங்கள்.

## சேவைகள்

பயணிகளினதும் பொருட்களினதும் போக்குவரத்துக்காகப் பாதுகாப்பானதும் நம்பகரமானதும் குறிப்பிட்டுள்ள காலத்தில் சேவையில் ஈடுபடக் கூடிய கட்டமைப்பினையும் கொண்ட செயற்திறமை மிக்க புகையிரதப் போக்குவரத்துச் சேவை ஒன்றையும் வழங்குவோம்.

## 01. குறிக்கோள்

- புகையிரதப் பிரயாணிகளினதும், பொருட்களினதும் போக்குவரத்துப் பிரிவுகளினது பங்களிப்பை மேலோங்கச் செய்தல்.
- புகையிரத இயக்கப் பாடுகளிலே பாதுகாப்பை உறுதி செய்தல்.
- பயணிகள் புகையிரத சேவைகளிளே பிரதி பலன்களை மேலபிவிருத்தி செய்தல்.
- முகாமைத்துவச் செயற் திறமையை மேலோங்கச் செய்தல்.
- புகையிரதத்தினது வருமானத்தினை அதிகரிக்கச் செய்தல்.
- மனித வளத்தை விருத்தி செய்தல்.

## 02. நிறை வேற்றுச் சாராம்சம்

புகையிரத யாப்பின் கோவைகளுக்கு அமைவாக அரசாங்கத்தின் கூட்டுத்தாபனம் என்ற வகையிலே நிகழ்காலத்திலே இயக்கப் பாட்டுச் செயற் பாடுகள் செயற் படுத்தப் பட்டுக் கொண்டிருக்கிறது. கூட்டுத்தாபனத்தின் தலைவராக புகையிரத முகாமையாளர் செயற் படுவதுடன் மேலதிக புகையிரத முகாமையாளர் (இயக்கப்பாடு), மேலதிக புகையிரத முகாமையாளர் (தொழில் நுட்பம்) மேலதிக புகையிரத முகாமையாளர் (நிர்வாகம்) என கூட்டுத்தாபனத்தின் உப தலைவர்கள் மூன்று பேர் கொண்ட உப தினைக்களத் தலைவர்களினதும், அலகுகளின் தலைவர்களினது கீழும் தொழிற்படுகின்ற இத் தினைக்களத்தினது கூட்டுத் தாபனப் பரம்பலினை கீழுள்ளவாறு காட்ட முடிகின்றது.

**புகையிரத முகாமையாளர்**

| மேலதிக புகையிரத முகாமையாளர் (தொழில் நுட்பம்) | மேலதிக புகையிரத முகாமையாளர் (இயக்கப் பாடு) | மேலதிக புகையிரத முகாமையாளர் (நிர்வாகம்) |
|---|---|---|

**உப திணைக்களம் / அலகுகளின் தலைவர்கள்**

1. பிரதான கணக்காளர்
2. பிரதான களஞ்சிய அத்தியட்சகர்
3. பிரதான பொறியியலாளர் (இயக்கவலு)
4. பிரதான இயந்திரவியல் பொறியியலாளர்
5. பிரதான பொறியியலாளர் (பாதைகளும் தொழிற் சாலைகளும்)
6. பிரதான பொறியியலாளர் (சைகையும் மின் தொடர்பாடலும்)
7. போக்குவரத்து அத்தியட்சகர்
8. வணிக அத்தியட்சகர்
9. அத்தியட்சகர் (இலங்கை புகையிரதப் பாதுகாப்புப் படை)
10. பணிப்பாளர் (திட்டமிடல்)
11. பணிப்பாளர் (இலங்கை - ஜெர்மனி தொழில் நுட்பப் பயிற்சி நிலையம்)
12. முகாமையாளர் (தகவல் திரட்டல்)
13. பிரதான கணக்காய்வு உத்தியோகத்தர்

**உப திணைக்களங்களும் / அலகுகளும்**

1. புகையிரத முகாமையாளர் அலுவலகம்.
2. பிரதான இயந்திரவியல் பொறியியலாளர் உப திணைக்களம்.
3. பிரதான பொறியியலாளர் (பாதைகள் / தொழிற் சாலைகள்) உப திணைக்களம்.
4. பிரதான பொறியியலாளர் (இயக்கவலு) உப திணைக்களம்.
5. பிரதான பொறியியலாளர் (சைகையும் மின் தொடர்பாடல்) உப திணைக்களம்.
6. கணக்காளர் உப திணைக்களம்.
7. வணிக உப திணைக்களம்.
8. போக்குவரத்து உப திணைக்களம்.
9. புகையிரதக் களஞ்சிய உப திணைக்களம்.
10. திட்டமிடல் பிரிவு.
11. இலங்கை - ஜெர்மனி தொழில் நுட்பப் பயிற்சி நிலையம்.
12. பிரதான கணக்காய்வு உத்தியோகத்தர் அலுவலகம்.
13. இலங்கை புகையிரதப் பாதுகாப்புப் படை.
14. விபரம் திரட்டும் பிரிவு.

**புகையிரத நிலையம்**

| இலக்கம் | பாதைகள் | பிரதான புகையிரத நிலையம் | உப புகையிரத நிலையம் | Halts |
|---|---|---|---|---|
| 01 | பிரதான பாதை | 45 | 34 | 22 |
| 02 | மாத்தளைப் பாதை | 05 | 06 | 9 |
| 03 | புத்தளம் பாதை | 18 | 25 | - |
| 04 | களனிப் பள்ளத்தாக்குப் பாதை | 11 | 19 | - |
| 05 | மட்டக்களப்புப் பாதை | 14 | 16 | 4 |
| 06 | வடக்குப் பாதை (பளை வரையிலே) | 22 | 13 | 3 |
| 07 | திருகோணமலைப் பாதை | 04 | 02 | 1 |
| 08 | கரையோரப் பாதை | 36 | 33 | - |
| 09 | தலை மன்னார் பாதை (மடு வரையிலே) | 02 | 01 | - |
| 10 | மிஹின்தலைப் பாதை | 01 | - | - |
| 11 | விமான நிலையம் / கொலண்ணாவைப் பாதை | 2 | - | - |
| | **கூட்டுத் தொகை** | **160** | **149** | **39** |

பிரதான புகையிரத நிலையம் - 160
உப புகையிரத நிலையம் - 149
தரிப்பிடம் - 39
---------
**கூட்டுத் தொகை** 348
======

## 03. பின் விபரம்

2012ம் வருடத்துடன் ஒப்பிடுகையிலே 2013ம் வருடத்திலே புகையிரதச் சேவையானது நல்ல முறையிலான வளர்ச்சியைக் காட்டியுள்ளது. புகையிரத வருமானத்தின் அதிகரிப்பு, பிரயாணிகளின் போக்குவருத்திலே வெளிக் காட்டுகின்ற வளர்ச்சி, அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்தல், முறையான பராமரிப்புகளும் அபிவிருத்திச் செயற் பாடுகளும் இந் நிலைமைக்கு மிக முக்கிய காரணமாக இருந்தது.

வருடத்தினிலே செயற் படுத்தப் பட்ட பிரதான அடிப்படை வசதிகளினுள்ளே வடக்கிற்கும், தலைமன்னாருக்குமான புகையிரதப் பாதைகளிலே செய்யப் பட்ட மீள் நிர்மானச் செயற் பாடுகளின் வளர்ச்சியும், சீனாவிலிருந்து கொண்டு வரப் பட்ட S12 வர்க்கத்தினுடைய வலுவேகத் தொடர்களினை மலை நாட்டுப் பாதையிலேயும், களனிப் பள்ளத்தாக்குப் பாதையிலேயும், பிரதான பாதையிலே அலுவலகங்களிற்கானதும், தூரப் பிரயாணத்திற்கானதும், நகரங்களுக்கு இடையேயான சேவைகளுக்காகப் பயன் படுத்தியதும், இந்தியாவிலிருந்து விலைக்கு வாங்கிய M10 வர்க்கத்தினையுடைய புகையிரத இன்ஜின்கள் 6 ஐ ஓட்டச் செயற் பாடுகளுக்காகச் சேர்த்துக் கொண்டமை போன்ற காரணங்கள் மிக முக்கியமானவையாகும்.

2013ம் வருடத்திலே புகையிரத வருமானம் 11% இனால் ஆன அதிகரிப்பும், பயணிகளின் எண்ணிக்கைகள் 12% அளவிலான அபிவிருத்தியினை அடைந்துள்ளதன் காரணமாக மேலுள்ள நிலைமை மென் மேலும் உறுதிப் படுத்தப் படுகிறது. அது போன்றே இந்த வருடத்திலே வருமானத்திலும் பிரயாணிகளின் எண்ணிக்கையிலும் காணப் படுகின்ற அனுகூலங்களைப் போன்றே போதுமான அளவிலான அபிவிருத்திக்காக மிக முக்கிய காரணமாக இருந்ததுடன், வடக்குப் புகையிரதப் பாதையானது கிளிநொச்சி வரையிலேயும், தலைமன்னார் புகையிரதப் பாதையானது மடுவரையிலும் சேவைக்காகத் திறந்து இருத்தலும், புதிய வலு வேகத் தொடர்களை சேவைக்காகச் சேர்த்துக் கொண்டமை, புகையிரதத்தின் மீதான பயணிகளின் ஈர்ப்பு அதிகரித்திருத்தல், பிரயானிகளுக்கான வசதிகளினை அபிவிருத்தி செய்தல் ஆகிய காரணங்கள் மிக முக்கியமாகப் பங்காற்றியது.

புகையிரதச் சேவைக்குப் பிரயாணிகளின் எண்ணிக்கையிலே ஏற்பட்ட அதிகரிப்பும் அதற்கு ஏற்றவாறு பிரயாணிகளினது கோரிக்கைகளிளே உள்ள அதிகரிப்பினதும் காரணமாக இலங்கைப் புகையிரதச் சேவையானது செயற் திறன் மிக்கதும், சிக்கனமானதும், சூழலுக்கு அமைவானதுமான புகையிரத சேவையொன்றை வழங்குவதற்கான சவால்களிற்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

### 3.1 வடக்குப் புகையிரதப் பாதையின் அபிவிருத்தித் திட்டங்களின் வளர்ச்சி

| திட்டத்தின் பெயர் | மதிப்பிடப் பட்டுள்ள செலவு (அ.டொ.மி.) | எதிர் பாக்கப் படுகின்ற பௌதீக இலக்கு (தூரம் கி.மீ) | வளர்ச்சி வீதம் | |
|---|---|---|---|---|
| | | | மூலதனம் | பௌதீகம் |
| மதவச்சியிலிருந்து மடு வரையிலான புகையிரதப் பாதையை மீண்டும் நிர்மாணித்தல். | 81.30 | 43 | நிறைவு செய்துள்ளது | |
| மடுவிலிருந்து தலைமன்னார் வரையில் புகையிரதப் பாதையை மீண்டும் நிர்மாணித்தல். | 149.50 | 63 | 75% | 65% |
| ஓமந்தையிலிருந்து பளை வரையில் புகையிரதப் பாதையை நிர்மாணித்தல். | 185.49 | 91 | 90% | 97% |
| பளையிலிருந்து காங்கேசந் துரை வரையில் புகையிரதப் பாதையை மீண்டும் நிர்மாணித்தல். | 149.34 | 56 | 41% | 40% |
| வடக்குப் புகையிரதப் பாதைக்காகச் சைகையையும் மின் தொடர்பாடல் கட்டமைப்பினையும் நிர்மாணித்தல். | 86.50 | 313 | 50% | 43% |



நிறைவு செய்யப் பட்டுள்ள மதவச்சி - மடு புகையிரதப் பாதை




புதிதாக நிர்மாணிக்கப் பட்டுள்ள கிளிநொச்சி புகையிரத நிலையம்

இன்னும் 2013ம் வருடத்திலே எந்தவொரு புகையிரத விபத்தும் அறிக்கையிடப் படாதுள்ளதுடன், பாதுகாப்பற்ற புகையிரதப் குறுக்குப் பாதைகளிலே பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்காகப் பாதுகாப்புப் பிரிவுகளுடன் சேர்ந்து செயற் படுத்தப் பட்ட செயற் பாடுகள் மிகவும் சாத்தியப் பட்டதன் காரணமாகவும் பாதுகாப் பற்ற புகையிரதக் குறுக்குப் பாதைகளிலே விபத்துக்கள் பற்றி அறிக்கையிடப் படவில்லை. 2013ம் வருடத்திலே பாதுகாப் பற்ற புகையிரதக் குறுக்குப் பாதையிலே ஏற்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கைள் 118 இருந்து 76 வரை குறைவடைந்திருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. இன்னும் புகையிரதப் பிரயாணிகளுக்கான பயனிகள் கி.மீட்டர்களின் அளவு 24% இனால் அதிகரித்து இருப்பதும் சன நெரிசல் மிக்க புகையிரத சேவையானது குறிப்பிட்ட நேரத்திற்குப் பிரயானம் செய்தல் 43% அளவில் சாத்தியப் பட்டிருப்பதும், பிரதானமான செயற் சாதனை அட்டவனையிலே தெளிவாக வெளிக் காட்டப் படுகின்ற வளர்ச்சியினை எடுத்துக் காட்டியுள்ளது.



பாதுகாப்பான புகையிரதக் குறுக்குப் பாதை நிர்மாணித்தல்

புகையிரதக் கூட்டுத்தாபனத்தினது வருமானத்தின் அளவிலே அதிகரிப்பைக் காட்டினாலும் மீள் வரல் செலவுகளினது அதிகரிப்பின் காரணமாக இந்த வருடத்திலும் இயக்கப் பாட்டு நட்டம் அதே அளவிலே காணப் படுகிறது. மொத்த வருமானமானது மீள் வரல் செலவுகளின் 51% ஆகும். இதற்காக 2012ம் வருடத்தின் மீள் வரல் செலவுகளைக் காட்டிலும் 2013 வருடத்தின் மீள் வரல் செலவு 22% ஆல் அதிகரித்துக் காணப் படுவதற்கு மிக முக்கிய காரணமாகியது. இதனுள் தொழிலாளர் சம்பளம், எரிபொருள் செலவுகள் போன்றவைகளிலே உள்ள அதி கூடிய அதிகரிப்புகளும் மிக முக்கியமான காரணங்களினுள் உள்ளடக்கப் படுகிறது.

எப்படியாயினும் 2013ம் வருடத்தினிலே எதிர்பார்க்கப் பட்ட வளர்ச்சியை அடைந்து கொண்டு பிரயாணிகளையும் பொருட்களினையும், போக்குவரத்து செய்து கொண்டு செயற் திரன் மிக்க மானதும், பாதுகாப்பானதும், அதிமிகு சௌகரியங்களை உடையதும், சிக்கனமானதும், சுற்றாடலுக்கு உகந்த வகையிலுமான போக்குவரத்துச் சாதனமொன்றாகத், தேசிய போக்குவரத்துக் கட்டமைப்பிற்குச் செயற் பாட்டுடன் கூடிய பங்களிப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கு முடியுமாக்கிக் கொண்டமையானது எல்லா உப திணைக்களங்களினதும், கிளைகளினதும், அலகுகளினதும், கூட்டான ஒத்துழைப்பினால் ஆகும்.

### 3.2 சகல விதத்திலுமான விபரிப்புக்கள்

தேசிய பொருளாதாரத்திற்குத் தொடரான வளர்ச்சியைப் பெற்றுக் கொடுப்பதற்காகப் போக்குவரத்துத் துறையின் பங்களிப்பை மென்மேலும் பெற்றுக் கொடுப்பதன் மூலம் இலங்கைப் புகையிரதச் சேவையானது தொடர்ச்சியாகப் பிரயாணிகளினதும் பொருட்களினதும் போக்குவரத்திலே சுறு சுறுப்பாகவும் செயற் திறனுடனும் செயற் பட்டுக் கொண்டு 2013ம் வருடத்திலேயும் தனது நாளாந்தச் செயற் பாடுகளிலே ஈடு பட்டிருந்தது.

புத்தம் புதிய புகையிரத வலு வேகத் தொடர்களினைச் சேர்த்துக் கொண்டு நடை முறையிலுள்ள தூரப் பிரயாணச் சேவைகள், சன நெரிசல் மிக்க சேவைகள், நகரங்களுக்கு இடையேயான புகையிரத சேவைகள், அலுவலக சேவைகள் என்பவற்றிற்காகப் புதிய வலுவேகத் தொடர்களினை சேவைக்குச் சேர்த்துக் கொள்ளல், புகையிரத நிலையங்களிலே பிரயாணிகளின் வசதிகளை விருத்தி செய்தல், கைத் தொலை பேசியின் மூலம் எல்லாப் புகையிரதங்களிற்குமான இருக்கைகளை ஒதுக்கிக் கொள்ளும் செயற் பாடுகளினை விரிவு படுத்துவதன் மூலமும் கவர்ச்சிகரமான பயணிகளுக்கான சேவை ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்காகத் தினிப்புடன் செயற் பட்டது.

இன்னும் தலைமன்னார் புகையிரதப் பாதையிலே மதவச்சியிலிருந்து மடுப் புகையிரத நிலையம் வரையிலேயுமான புகையிரதப் பாதையினை மீண்டும் நிர்மாணம் செய்து புகையிரத இயக்கப் பாட்டுச் செயற் பாடுகளினை விரிவு படுத்தியும், வடக்கு புகையிரதப் பாதையிலே கிளிநொச்சி வரையிலேயும் புகையிரதப் பாதையை மீண்டும் நிர்மாணம் செய்தும், புகையிரத இயக்கப் பாட்டுச் செயற் பாட்டை விரிவு படுத்தியதும் இவ் வருடத்திலே பெற்றுக் கொள்ளப் பட்ட பிரதான வெற்றிகளிலே முக்கியமான தொன்றாகக் கருத முடியும். இன்னும் பிரயாணிகளின் தேவைப் பாட்டிற்குப் பொருத்தமான வகையில் திட்ட மிட்டுக் கவர்ச்சியானதும் செயற் திறமை உடையதுமான புகையிரத சேவை ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கான செயற் பாடுகளினை செயற் படுத்தியது. இந்தச் செயற் பாடுகளினை வெற்றி பெறச் செய்வதற்காகப் புகையிரத கூட்டுத்தாபனத்தின் எல்லா உப திணைக்களங்களினதும் அலகுகளினதும் தொடரான பங்களிப்பானது மிக முக்கிய காரணமாக அமைந்தது.

2013ம் வருடத்திலே தெளிவாக வெளிக் காட்டுகின்ற வருமான அறிக்கையினை சமர்பித்துள்ளதன் மூலம் 2012ம் வருடத்திலே ரூ. மி. 4,235.38 ஆக இருந்த வருமானத்தை 2013ம் வருடத்திலே ரூ.மி. 5,423.29 வரையில் விருத்தி செய்து கொள்ள முடிந்துள்ளது. அது சென்ற வருடத்தை விடவும் 11% அளவிலான வருமான அதிகரிப்பாகும். இங்கு பிரயாணிகளின் போக்குவரத்திலே தெளிவாக வெளிக் காட்டுகின்ற வளர்ச்சியை ஏற்படுத்தி, 2012ம் வருடத்திலே பிரயாணித்த பிரயாணிகளின் எண்ணிக்கையாகிய மில்லியன் 106.04 ஆனதை. 2013ம் வருடத்தின் முடிவிலே பிரயாணித்த பிரயாணிகளின் எண்ணிக்கையானது மில்லியன் 118.7 வரையிலே 12% அளவில் அதிகரித்துக் கொள்ள முடிந்துள்ளது.

சகல விதமானதுமான பொருட்களின் போக்குவரத்திலே சிறிய குறைவைக் காட்டினாலும் எரி பொருள்களின் போக்கு வரத்துச் செயற் பாடுகளும், சீமெந்து, விவசாய உற்பத்திகள் போன்ற பொருட்களின் போக்கு வரத்துகளானது தொடராகச் செய்யப் பட்டது.

2013ம் வருடத்திலே சகல விதமான செலவுகளும் ரூ.மி. 30,835.46 ஆக இருந்ததுடன் அதிலே மீள் வரல் செலவு ரூ.மி. 10,586.47 ஆகவும் முதலீட்டுச் செலவுகள் ரூ.மி. 20,248.99 ஆகவும் இருந்தது. இது சென்ற வருடத்தை விடவும் அதிகரிப்பைக் காட்டுகின்றது. புகையிரதப் பாதையை மீண்டும் நிர்மாணித்தல்களும், அடிப்படை வசதிகளின் அபிவிருத்திகளும், பராமரிப்புச் செலவுகள் போன்றன அதிகரித்துக் காணப் படுவதாவது முதலீட்டுச் செலவுகளின் அதிகரிப்புக்குக் காரணமாக இருந்துள்ளது.

புகையிரத இன்ஜின்களினதும் வலுவேகத் தொடர்களினதும் திருத்தியமைக்கும் செயற் பாடுகளும், புகையிரதப் பெட்டிகளினது புனர் நிர்மானங்களும், புகையிரதப் பாதைகளினது பராமரித்தல்களும், புகையிரத நிலையங்களிலே கட்டிடங்களினை திருத்தி அமைத்தல்களும், புகையிரதப் பிரயாணிகளுக்கான மேம் பாலங்களினை நிர்மாணித்தல்களும், சைகையும் மின் தொடர்பாடல் கட்டமைப்பை மீள் விருத்தி செய்தல்களும், பராமரிப்புச் செயற் பாடுகளும் போன்ற செயற் பாடுகள் 2013 ஆம் வருடத்திலேயும் தொடராகச் செயற் படுத்தப் பட்டது.

புகையிரதப் பாதுகாப்புப் படையின் நாளாந்தச் செயற் பாடுகள் 2013ம் வருடத்திலேயும் செயற் படுத்தப் பட்டதுடன், சுற்றி வளைப்பு அலுவல்களும் அதற்கான செயற் பாடுகளின் மூலமும் 2013ம் வருடத்திலே ரூ.மி. 5.91 இனால் ஆன ஆதாயத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான பங்களிப்பை அளித்துள்ளது. இன்னும் புகையிரத எல்லைக்குள் அனுமதியற்ற வியாபாரிகளினை வெளியேற்றுதல், புகையிரதப் பிரயாணிகளினது பாதுகாப்புச் செயற் பாடுகள், அத்துமீறி தங்கியிருப்பவர்களை வெளியேற்றுவதற்காகச் சட்ட நடவடிக்கைகளினை மேற் கொள்ளல், புகையிரத வரையரையினுள்ளே கட்டணங்களையும் அபராதத் தொகையினையும் வசூலித்தல் போன்ற செயற் பாடுகள் தொடராக மேற் கொள்ளப் பட்டன.

## ஏனைய செயற் சாதனை அட்டவனைகள்

| இலக்கம் | செயற் சாதனைக் காட்டி | 2012 | 2013 |
|---|---|---|---|
| | புகையிரதப் பாதையின் தூரம் (கி.மீ) | | 1640 |
| 01 | புகையிரத அணி (சேவைக்காக உள்ள) | | |
| | 1.1. இன்ஜின்கள் | 69 | 71 |
| | 1.2. வலு வேகத் தொடர்கள் | 56 | 74 |
| | 1.3. பெட்டிகள் | 560 | 740 |
| | 1.4. கல் / சரக்குப் பெட்டிகள் | 1090 | 819 |
| 02 | புகையிரத அணி (அனுகூலமான சேவையை செயற் படுத்தத் தேவையான) | | |
| | 2.1. இன்ஜின்கள் | 74 | 78 |
| | 2.2. வலு வேத் தொடர்கள் | 60 | 75 |
| | 2.3. பெட்டிகள் | 526 | 500 |
| | 2.4. கல் / சரக்குப் பெட்டிகள் | 900 | 750 |
| 03 | புகையிரத இயக்கம் | | |
| | 3.1. பிரயாணிகளின் எண்ணிக்கை | 106.04 | 118.7 |
| | 3.2. பொருட்கள் (மெ.தொ) | 2.06 | 1.88* |

| | | | |
|---|---|---|---|
| 04 | புகையிரத இயக்கம் (கி.மீட்டர் மில்லியன்)<br>4.1. பிரயாணிகள்<br>4.2. பொருட்கள் | <br>5039.44<br>143.44 | <br>6257.37<br>128.2* |
| 05 | 4.3. புகையிரதம் (கி.மீ.) | 10.36 | 10.49 |
| 06 | மொத்த வருமானம் (ரூ.மி.)<br>5.1. பிரயாணிகள்<br>5.2. பொருட்கள்<br>5.3. ஏனையவைகள் | 4851.86<br>3599.49<br>461.85<br>790.53 | 5423.29<br>4487.65<br>412.9<br>522.74 |
| 07 | மொத்த செலவுகள் (ரூ.மி)<br>6.1. மீள் வரல் செலவுகள்<br>6.1.1. ஊதியம்<br>6.1.2. பராமரிப்பு<br>6.2. முதலீட்டுச் செலவு | 38724.87<br>8647.65<br>3190.31<br>30077.22 | 30835.46<br>10586.47<br>3117.42<br>20248.99 |
| 08 | எரிபொருள் பாவனை (ஒடோ டீசல் லீட்டர் மி.)<br>எரிபொருளுக்கான மொத்த செலவு (ரூ.மி.) | 38.94<br>4531.22 | 34.92<br>4915.4 |
| 09 | மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை | 16070 | 16456 |

## 04. நிதியும் பௌதீக வளர்ச்சியும்

2013ம் வருடத்திற்காக இலங்கை புகையிரதக் கூட்டுத்தாபனத்திற்காக ரூ.மி. 32541.96 வேறாக்கிக் கொடுக்கப் பட்டிருந்தது. இந்தத் தொகையானது கீழ் குறிப்பிடப் படுகின்ற பிரதானமான செயற் பாடுகளுக்காகப் பயன் படுத்தப் பட்டது.

01. புகையிரத அணிக்குப் புதிதாக விலைக்கு வாங்குவதற்கும், மேலதிக அபிவிருத்திகாகவும், பராமரிப்புச் செயற் பாடுகளிற்காகவும்.

02. புகையிரதப் பாதை வளையமைப்பிளே மீள் நிர்மாணங்களிற்கும் மேலதிக அபிவிருத்திக்கும் பாலங்களினை நிர்மாணிப்பதற்கும், பராமரித்தல்களுக்கும், கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கும் நவீனமயப் படுத்தல்களுக்காகவும்.

03. சைகையும் மின்தொடர்பாடல் கட்டமைப்பை நிருவுதலும், மேலதிக விருத்தி செய்தலும், பராமரிப்புச் செயற்பாடுகளிற்காகவும்.

04. புகையிரத நிலையங்களின் அபிவிருத்திகளும், பயணிகளுக்கான வசதிகளினை விருத்தி செய்தல்களும்.

05. பொதுவான நிர்வாகச் செயல்கள், பாதுகாப்புச் செயல்கள், மனித வள அபிவிருத்திச் செயற் பாடுகள்.

### 2013ம் வருடத்திற்கான எல்லா விதத்திலுமான மூலதன வேறாக்கல்களும் செலவுகளும்

| இலக்கம் | செலவுகள் | மூலதனம் (ரூ.மி) | உண்மையான செலவு (ரூ.மி.) | வளர்ச்சி (ரூ.மி.) |
|---|---|---|---|---|
| 1 | மீள் வரல் செலவுகள் | 10791.46 | 10586.47 | 98.1 |
| 2 | முதலீட்டுச் செலவுகள் | 21750.5 | 20248.99 | 93.09 |
| மொத்தச் செலவுகள் | | 32.541.96 | 30.835.46 | 94.76 |

2013ம் வருடத்திற்கான நிதி வேறாக்கல்களிற்கும் செலவுகளிற்குமான எல்லா உப திணைக்களங்களும் தனது செயற் பாடுகளை நடாத்தியதன் போது ஏற் பட்ட செலவுகள்




பற்றிய விபரம் கீழுள்ள வரைபின் மூலம் காட்டப் படுகிறது.

**உப திணைக்களங்களினது நிதியியல் வளர்ச்சி – 2013**

| இலக்கம் | உப கூட்டுத் தாபனம் | வேறாக்கப் பட்ட தொகை (ரூ.மி) | | உண்மையான செலவு (ரூ.மி) | | இலக்கை அடைந்து கொண்ட வளர்ச்சி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீள்வரல் | முதலீடு | மீள்வரல் | முதலீடு | மீள்வரல் | முதலீடு |
| 01. | புகையிரத முகாமையாளர் காரியாலயம் (பு.மு.,பு.க,பு.க.அ) | 51.06 | 12 | 500.53 | 7.29 | 99.7 | 60.74 |
| 02. | இலங்கை ஜெர்மனி தொழில் நுட்பப் பயிற்சி நிலையம் | 21.11 | 9.5 | 21.51 | 5.03 | 101.88 | 52.99 |
| 03. | இயக்க வலு | 4123.79 | | 4131.73 | | 100.19 | |
| 04. | போக்குவரத்து | 2088.18 | 9.7 | 2033.75 | 9.34 | 97.39 | 96.32 |
| 05. | வணிகம் | 33.53 | 0.8 | 33.27 | 0.42 | 99.21 | 52.29 |
| 06. | பாதுகாப்புப் படை | 304.45 | 0.5 | 312.15 | 0.52 | 102.53 | 104.01 |
| 07. | சிறு திருத்தங்கள் (பி.இ.(இ)) | 806.50 | 469.75 | 777.85 | 469.74 | 96.45 | 100 |
| 08. | பிரதான இயந்திரவியல் பொறியியலாளர் | 954.87 | 3543.56 | 949.29 | 3,339.86 | 99.42 | 94.25 |
| 09. | பாதைகளும் தொழிற் சாலைகளும் | 1,698.33 | 15,755.23 | 1,594.95 | 14,574.59 | 93.91 | 92.51 |
| 10. | சைகையும் மின் தொடர் பாடல்களும் | 258.75 | 1,949.45 | 231.45 | 1,842.19 | 89.45 | 94.5 |
| **கூட்டுத் தொகை** | | **10.791.46** | **21.250.49** | **10.586.48** | **20.248.98** | **98** | **93** |

## மூலதனமும் பௌதீக வளர்ச்சியும் – 2013

## (2013 வரவு செலவு வேறாக்கள்களின் பிரகாரம்)

## இலங்கைப் புகையிரதச் சேவை

முதலீட்டுச் செலவு

| திட்டங்கள் | வேலைத் தொகுப்பு / செயற் பாடுகள் | நிதியியல் வேறாக்கள் | | | பௌதீக வளர்ச்சி |
|---|---|---|---|---|---|
| | | மூலதன இலக்கு (ரூ.மி) | உண்மையான செலவு (ரூ.மி) | வளர்ச்சி | |
| 01 | **சாதாரன நிர்வாகம்** | 3.5 | 273 | 78 | 80 |
| | புகையிரத முகாமையாளர் அலுவலகம் | 1.5 | 0.74 | 50 | 50 |
| | புகையிரத முகாமையாளர் அலுவலகம் | 0.5 | 0.45 | 90 | 90 |
| | பிரதான கணக்காளர் அலுவலகம் | 1.5 | 1.5 | 100 | 100 |
| | களஞ்சிய அத்தியட்சகர் காரியாலயம் | 0.45 | 0.45 | 100 | 100 |
| | **தகவல்களும் தொழில் நுட்பங்களையும் உடைய புகையிரதத்தினது சேவையை அறிமுகம் செய்தல்** | 5 | 2.3 | 67.57 | 75 |
| | இருக்கைகளை வேறாக்கிக் கொள்ளும் செயற் பாடு | 1 | - | - | - |
| | பயிற்சியும் அபிவிருத்தியும் | 1.5 | 1 | 69 | 70 |
| | பரிசீலனைக்கும் அபிவிருத்திக்குமான பிரிவு | 1 | 0.25 | 15 | 20 |
| | **பாதுகாப்புப் படை**<br><br>அலுவலக உபகரணங்களையும் மரத் தளபாடங்களையும் விலைக்கு வாங்குதல் | 0.5 | 0.52 | 101 | 100 |
| 02 | **இலங்கை ஜேர்மனி புகையிரதத் தொழில்நுட்பப் பயிற்சி நிலையம்** | 9.5 | 5.04 | 53 | 60 |
| | இயந்திரங்களும் உபகரணங்களும் | 1.1 | 1.1 | 100 | 100 |
| | இயந்திரங்களும் உபகரணங்களும் | 6.5 | 2.43 | 38 | 40 |
| | தேசிய தொழிற் தகைமை | 2 | 1.45 | 76 | 80 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 03 | **போக்குவரத்து** | | | | |
| | அலுவலக உபகரணங்களையும் மரத் தள பாடங்களையும் விலைககு வாங்குதல் | 9.7 | 9.3 | 98 | 100 |
| | **வணிக செயற் பாடுகள்** | 0.8 | | | |
| | அலுவலக உபகரணங்களையும் மரத் தள பாடங்களையும் விலைக்கு வாங்கள் | 0.3 | 0.323 | 107 | 105 |
| 04 | **சிறு திருத்தங்கள்** | 1,657.74 | 1,657.74 | 100 | 100 |
| | இன்ஜின், கல், பெட்டிகளில் சீர் திருத்தங்களுக்கான உதிரிப் பாகங்கள் | 143.38 | 143.38 | 100 | 100 |
| | அலுவலக உபகரணங்களையும் மரத் தள பாடங்களையும் விலைக்கு வாங்கள் | 0.26 | 0.25 | 97 | 99 |
| | ஓட்ட மடுவங்களினை மேலதிக விருத்தி செய்தல் | 23.04 | 23.04 | 100 | 100 |
| 04 (i) | **முக்கியமான திருத்தங்கள்** | 1,657.74 | 1,657.74 | 100 | 100 |
| | இன்ஜின், கல், பெட்டிகளில் சீர் திருத்தங்களுக்கான உதிரிப் பாகங்கள் | 1,400.6 | 1,400.6 | 100 | 100 |
| | பெட்டிகளைத் திருத்தியமைத்தல் | 45 | 44.12 | 98 | 98 |
| | இன்ஜின்களுக்கான உதிரிப் பாகங்களை விலைக்கு வாங்கள் | 98.36 | 98.36 | 100 | 100 |
| | புகையிரதப் பெட்டிகளை திருத்தியமைக்கும் திட்டங்கள் | 12 | | | |
| 04 (ii) | “லேத்” இயந்திரம் திருத்தியமைத்தல் | 1 | 0.22 | 22 | 20 |
| | **இயந்திரங்களினது திருத்தம்** | 1 | 0.88 | 9 | 9 |
| | இந்தியாவிலிருந்து வலுவேகத் தொடர்களை விலைக்கு வாங்கள் | 1677.46 | 1533.57 | 91 | 90 |
| | வடக்கு பாதைக்காக இன்ஜின், கல், பெட்டிகளை விலைக்கு வாங்கள் | 1 | - | - | - |
| | இயந்திரவியல் பொறியியலாளர் உப திணைகளத்தினது இயந்திரங்களைத் திருத்தி அமைத்தல் | 50 | 5.77 | 11 | 10 |
| | **நிரந்தரப் பாதைகளினதும் கட்டிடங்களினதும் பராமரிப்பு** | - | - | - | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கட்டிடங்களும் நிர்மாணித்தல்களும் | 100 | 82.09 | 82 | 80 |
| | கூரையையும் கூரைப் பீலிகளையும் அமைத்தல் | 15 | 10.71 | 71 | 65 |
| | மோட்டார் வாகனங்களை விலைக்கு வாங்குதல் | 1 | 0.84 | 84 | 80 |
| | "டாம்பின்" இயந்திரத்தை விலைக்கு வாங்குதல் | 1 | - | -- | - |
| | மூலப் பொருட்களின் போக்கு வரத்திற்காக Chroler இயந்திரத்தை விலைக்கு வாங்குதல் | 20 | 17.89 | 90 | 90 |
| | அலுவலக உபகரணங்களை விலைக்கு வாங்கள் | 0.37 | 0.36 | 97 | 97 |
| | தேசத்திற்கு மகுடம் வேலைத் திட்டம் | 28.80 | 28.80 | 100 | 100 |
| | உருக்கினாலான பாலங்கள் | 50.46 | 50.46 | 100 | 100 |
| | நிரந்தர பாதைகளின் பராமரிப்பு | 2,129.47 | 2,129.47 | 100 | 100 |
| | "கொன்கிரீட்", சில்பர், உற்பத்திக் கூடம் | 366.57 | 364.59 | 99.4 | 98 |
| | ராகமை - புத்தளம் புகையிரதப் பாதை | 40 | 37.77 | 94 | 90 |
| | களனிப் பள்ளத்தாக்குப் புகையிரதப் பாதை | 33.50 | 33.50 | 100 | 100 |
| | வடக்குப் புகையிரதப் பாதையை மேலபிவிருத்தி செய்தல் | 32.02 | 32.02 | 100 | 100 |
| | கண்டி, பேராதனை, கடுகண்ணாவை, மாஹோ அபிவிருத்தித் திட்டங்கள் | 15 | 0.39 | 2.6 | 1 |
| | புகையிரத குறுக்குப் பாதையை நிர்மானித்தல் | 363.73 | 185.13 | 51 | 45 |
| | பொல்கஹவெலையிலிருந்து அநுராதபுரம் வரையிலான புகையிரதப் பாதையை இரட்டை மயமாக்குதல் | 1 | | - | - |
| | களுத்துரையிலிருந்து பயாகலை வரையிலான புகையிரதப் பாதையை இரட்டை மயமாக்குதல் | 135.24 | 8.04 | 5.9 | 1 |
| | புகையிரத நிலையத்தினை நவீன மயப் படுத்தல் | 400 | 236.02 | 59 | 50 |
| | காணி அளத்தல் | 1 | 0.67 | 67 | 60 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பாதைக்குக் குறுக்காக இருக்கின்ற புகையிரதப் பாதையை மேலபிவிருத்தி செய்தல் | 10 | 7.41 | 74 | 74 |
| | கொழும்புக் கோட்டைப் பாலத்தினை நிர்மானித்தல் | 1 | | | |
| | களனிப் பாலத்தினை நிர்மானித்தல் | 1 | | | |
| | கிழக்குப் புகையிரதப் பாதையை அபிவிருத்தி செய்தல் | 75 | 73.72 | 98 | 95 |
| | இந்தியாவின் கடன் உதவியின் கீழ் கரையோரப் புகையிரதப் பாதையை நவீன மயப் படுத்தல் | 399.61 | 399.61 | 100 | 100 |
| | இந்தியாவின் கடன் உதவியின் கீழ் கரையோரப் புகையிரதப் பாதையை நவீன மயப் படுத்தல் | 1,035.69 | 1,035.69 | 100 | 100 |
| | ஓமந்தை - பளை புகையிரதப் பாதையை மீண்டும் நிர்மாணித்தல் | 4436.25 | 4436.25 | 100 | 100 |
| | ஓமந்தை - பளை புகையிரதப் பாதையை மீண்டும் நிர்மாணித்தல் | 400 | 399 | 99 | 100 |
| | மதவச்சி - மடு வரையிலான புகையிரதப் பாதையை மீண்டும் நிர்மாணித்தல் | 1800 | 1620 | 90 | 95 |
| | மதவச்சி - மடு வரையிலான புகையிரதப் பாதையை மீண்டும் நிர்மாணித்தல் | 200 | 178.32 | 89 | 80 |
| | மடு - தலைமன்னார் புகையிரதப் பாதையை மீண்டும் நிர்மாணித்தல் | 1161.89 | 1161.89 | 100 | 100 |
| | மடு - தலைமன்னார் புகையிரதப் பாதையை மீண்டும் நிர்மாணித்தல் | 250 | 241.78 | 97 | 95 |
| | பளை - கான்கேசந்துரை புகையிரதப் பாதையை மீண்டும் நிர்மானித்தல் | 2,000 | 1,592.18 | 80 | 70 |
| | பளை - கான்கேசந்துரை புகையிரதப் பாதையை மீண்டும் நிர்மாணித்தல் | 250 | 208.99 | 84 | 82 |
| | | | | | |
| | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 04 (iii) | **சைகையும் மின் தொடர்பாடல் கட்டமைப்பும்** | | | | |
| | சைகையும் மின் தொடர்பாடல் கட்டமைப்புச் செயற் பாடுகள் | 100 | 99.95 | 99 | 99 |
| | சைகையும் மின் தொடர்பாடல் உப தினைக்களத்திலே 50 வருடங்களிற்கு மேலான பழைய இயந்திரங்களை மீண்டும் பொருத்துதல் | 10 | 1.35 | 14 | 10 |
| | அலுவலக உபகரணங்களை விலைக்கு வாங்கள் | 0.37 | 0.34 | 91 | 90 |
| | மருதானை - கொழும்பு கோட்டை, இடையேயான நான்காவது பாதையினையும், ஊருகொடவத்தை - களனிக்குமான 3வது பாதையிலே சைகை முறையையும் நிர்மாணித்தல். | 40 | 11.53 | 29 | 20 |
| | மருதானைக்கும் வாத்துவைக்கும் இடையே நடுத் தரத்திலான சைகை முறையினை அறிமுகம் செய்தல் | 50 | 27.82 | 56 | 50 |
| | ஜா-எல - சீதுவை வரையிலான இரண்டாம் பாதைக்காகச் சைகை முறையை நிர்மாணித்தல் | 39.59 | 39.59 | 100 | 100 |
| | புதிய சைகை முறையொன்றை நிர்மானம் செய்தல் | 3.46 | 3.46 | 100 | 100 |
| | கொழும்பு சன நெரிசல் மிக்க பிரதேசத்தை மின் மயமாக்கல் | 1 | - | - | - |
| | ராகமம், நீர்கொழும்பு, ரம்புக்கனை பாதைகளுக்காகப் புதிய சைகை முறையை நிர்மானித்தல் | 1 | - | - | - |
| | 50 வருடங்களுக்கு மேலான பழைய கடிகாரங்களிற்குப் பதிலாக புதிய கடிகாரங்களினை நிறுவுதல் (மருதானையிலேயும், கொழும்பு கோட்டையிலேயும்) | 2 | - | - | - |
| | | 6.02 | 4.47 | 74 | 63 |
| | வடக்கு புகையிரதப் பாதைக்காகச் சைகை முறையை நிர்மானித்தல் | 1488.08 | 1482.23 | 99 | 99 |
| | வடக்கு புகையிரதப் பாதைக்காகச் சைகை முறையை நிர்மானித்தல் | 200 | 163.52 | 82 | 80 |
| | Installation of Stand by Batteries | 7.92 | 7.92 | 100 | 100 |

## 05. ஓட்டச் சக்தியை வழங்களும் புகையிரத அணியும்

2013ம் வருடம் புகையிரத அணியின் அபிவிருத்திக்கு மிகவும் பங்காற்றிய வருடமாவதுடன் அதன் பிரகாரம் புதிய வலுவேகத் தெடர்களையும் இன்ஜின்களையும் ஓட்டச் செயற் பாடுகளுக்காகச் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளது. இதனூடக சன நெரிசல் மிக்க சேவை, அலுவலக சேவை, நகரங்களுக்கு இடையேயானதும் தூரப் பயணிகளுக்கான சேவைக்காகவும் புதிய புகையிரதங்களினைச் சேர்த்துக் கொள்ளப் பட்டது. இன்னும் செயற் திறமையுடனும், சொகுசான பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையைப் பெற்று கொடுப்பதற்காகவும், பொருட்களின் போக்குவரத்துக்காகவும் இந்த மனம் கவர்ந்த நிலைமை மிகவும் பங்காற்றியது.

அது போன்றே புகையிரத அணியிலுள்ளே டீசல் மின் இன்ஜின்களின் பொதுவான நிலைமையை 60 அளவில் பேனிக் கொள்ள முடிந்ததுடன் சேவைக்காகப் பயன் படுத்திய சாதாரன வலுவேகத் தொடர்களின் அளவை 13% இனால் கூட்டிக் கொள்ள முடிந்தது.

### 5.1 புகையிரத அணி

2013ம் வருடத்திலே இருந்த பொதுவான புகையிரத அணியினைக் கீழுள்ள அட்டவணையிலே காட்டப் பட்டுள்ளது

| இலக்கம் | வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | புகையிரத இன்ஜின்கள் | 66 |
| 02 | வலுவேகத் தெடர்கள் | 72 |
| 03. | பயணிகள் பெட்டிகள் | 685 |
| 04 | கல் | 813 |

### 5.2 எரிபொருள் பாவணைகள்

புகையிரத இன்ஜின்களிற்கும் வலுவேகத் தொடர்ககளிற்குமாக பின்வரும் வகையில் எரிபெருள் பயன் படுத்தப் பட்டுள்ளது.

| எரிபொருள்களின் வகை | 2012 (லீற்றர்) | 2013 (லீற்றர்) |
|---|---|---|
| டீசல் லீற்றர் (மில்லியன்) | 32.44 | 34.92 |
| ஏரி பெருள்களுக்கான செலவு (ரூ.மி) | 4531 | 4915 |

2012ம் வருடத்துடன் ஒப்பிடுகையில் 2013ம் வருடத்திலே மொத்த எரிபொருள் பாவணையின் அளவு அதிகரித்து இருப்பதுடன் அதற்காகப் பங்காற்றிய காரணிகளினுள் புதிய வலுவேகத் தொடர்களும் இன்ஜின்களும் ஓட்டத்திற்காகப் பயன் படுத்தியதாகும். 2013ம் வருடத்திலே எரிபொருள் பாவனை 7% இனால் அதிகரித்து இருப்பதுடன் செலவு ரூ.மி 384 அளவு அதிகரித்துள்ளது.

### 5.3 இன்ஜின் கோளாருகள்

**2009 இருந்து 2013 வறை இன்ஜின் கோளாருககளின் எண்ணிக்கை கீழுள்ள அட்டவனையில் காட்டப் பட்டுள்ளது.**

| வருடம் | இன்ஜின் கோளாருகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2009 | 583 |
| 2010 | 593 |
| 2011 | 660 |
| 2012 | 550 |
| 2013 | 530 |

2009ம் வருடத்துடன் ஒப்பிடுகையில் 2012ம் வருடம் வரையிலே இன்ஜின்களினது கோளாறுகளின் எண்ணிக்கையிலே குறைவைக் காட்டுகிறதுடன் அது 550 ஆகவும் இருந்தது. அதே போன்று இந்த நிலைமை 2013ம் வருடத்திலே மென் மேலும் குறைவாகியுள்ளதைக் காண முடிகிறது. அதற்காகப் பிரதான காரணமாக இருந்த காரணியாவது இன்ஜின்களுக்கான முறைமையான பராமரிப்புச் செயற் பாடுகளும், அபிவிருத்திச் செயற் பாடுகளும் இடை விடாது தொடராகச் செய்யப் பட்டமையாகும்.

இன்ஜின் கோளாறுகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் 40 வருடங்களிற்கு மேலான பழமை வாய்ந்த இன்ஜின்களினது பராமரிப்புச் செயற் பாடுகளை மேற் கொள்ளுதலானது மிகப் பாரிய சவலாக இருந்ததுடன் பாரிய அளவிளான செலவுகளுக்கு உட் படுத்தப் படக் கூடிய செயலாகவும் இருந்தது. இதன் காரனமாக செயற் திரமை மிக்கதான புகையிரத அணியை செயற் படுத்திக் கொண்டு போவதற்காகப் புகையிரத இன்ஜின்கள், வலு வேகத் தொடர்கள் என்பன புதிதாக விலைக்கு வாங்குவதற்கான அவதானம் செலுத்தப் பட்டுள்ளது.

## 06. நிரந்தரப் பாதைக் கட்டமைப்பும் கட்டிடங்களும்

